(6323)

ஓம்.

# ஏழின் தத்துவார்த்த விளக்கம்

( மாதவமே இவ்வுருவாய் வந்ததுகாண் வழிவசமாய் )

ஆக்கியோன்:

முடிவை,

**வித்துவான் மு. திருஞானசம்பந்தன்**

சதாவதானம், சித்தாந்தப் பேராசிரியர்

பல்கலைக்கிழவர்.

பதிப்பாளர்:

...ர் S. C. சுப்ரமணிய பிள்ளை,

...ரத வீதி :: தூத்துக்குடி.

GF
R673x1:9
விரோதி

ஓம்.



பதிப்பாளர் :

ராவ்பகதூர் S. C. சுப்ரமணிய பிள்ளை,

வடக்கு ரத வீதி :: தூத்துக்குடி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புரை.

யாம் எழின் தத்துவ ஆராய்ச்சி நூலை, நூல் அச்சுவாகன மேறுவதற்கு முன்னரே கண்ணுற்றனம். அதன்கண் ஏழு என்ற எண் இலக்கத்திலேயும் எண்ணிலேயுமாராயப்பட்டிருக்கின்றது. நுணுக்கமாய் ஆராயப்புகுந்த நூலுக்கு அதிகார வகுப்பைக் கண்ணுறும் பொழுது தொல்காப்பியர் சேர்த்துக் கொண்டிருக்கிற ஒழிபியலைக்கடைசியில் வைத்து சித்தாந்த சாத்திரங்களிற் புகல்கின்ற மாதிரி, பதியியல், பசுவியல் பாசவியலை வகுத்திருக்கின்றது. மேலாக ஒப்பியல் என்ற ஒன்றை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. இந் நூலைக் கண்ணுறும் பொழுது இந் நூலாசிரியர் சித்தாந்தம், இலக்கணம், இலக்கியம், ஆங்கிலம், ஆரிய முதலியவைகளை நன்ருகக் கற்றுத் தேர்ந்த வல்லுநர் என்பதுபோதருகின்றது.

ஏழு என்ற இலக்கம் இறைவனைப் போன்றது என்று கூறியிருப்பது மிகவும் பாராட்டற்குரியது. மேலும் தமிழ் எழுத்துக்களை சித்தாந்த முறைப்படி ஆராய்ச்சி செய்து காட்டியிருப்பது யாராலுங் கண்டு கொள்ளற்கியலாதது. இலக்கம் 7 எழுத்து எ என்ற இரண்டும் ஒன்று என்று கண்டு கொள்வதற்கு இது ஒரு திறவு கோலாகும். நூலை நோக்குங்கால் நூலாசிரியர் தமிழ்பற்று, மிகவும் மேலான போற்றற்குறிய நிலைமை, மிகக்கொண்டு நூலன்பு பொதிந்து கிடக்கின்றது.

இன்னும் சோதிட முறையில் ஏழை ஆராயப் புகுந்தது மிகவும் நன்ருக இருக்கின்றது. கருவிலே 7 என்ற இலக்க மாதிரி சிசுக்களிருக்கின்றன என்பது இநன் கொள்கை. ஆசிரியர் புகல்கிற

மாதிரி இலக்கத்தில், சிசுவின் தலையை நின்ற இலக்கத்திற் காண்கிறோம். எண் (தமிழ்) மிகவும் பொருத்தமாக இருக்கின்றது.

நூலிற்குள் பொதிந்து கிடக்கும் பொருள்களாவன:— சித்தாந்தம், வேதாந்தம், கிறிஸ்தவம், மகமதியம், தொல்காப்பியம், இலக்கியம் முதலான பலவாம். இந்த நூலானது ஒப்பியலில், பாமரர்களுக்கு வேதத்தையும், ஆகமத்தையும் விளக்கிக் காட்டியிருப்பது மிகவும் நல்லமுறை. அது குருட்டுப்பூனை விட்டத்திற் பாய்ந்த உடனே விட்டமானது கைக்குக் கிட்டிவிட்ட மாதிரி இருக்கிறது. இது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற வுத்தியைத் தன்னுட் சுருக்கிக் கொண்டது.

இந்நூல் போன்ற இன்னும் பல நூல்களை ஆசிரியர் எழுதி, உலகிற் கீய்வான் வேண்டி, இந் நூலாசிரியர்க்கு மேன்மேலும் வாழ் நாளும், கல்வியும், செல்வமும் தில்லைநட்டம்பயில் நாதனருள்வானாக.

அறிவுக் கடனிலையம்,
பல்லாவரம்.
விரோதி வைகாசி 27-ம் நாள்

இப்படிக்கு
அடியாரினடியான்,
**மறைமலையடிகள்**

ஓம்
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

## பதிப்புரை.

பேரன்புடையீர்!

அடியேன் வெகு நாட்களாக 7 என்ற இலக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தேன். எனக்கு ஸ்தூல சூக்குமமாய் சில ஆராய்ச்சிகள் தென்பட்டுக் கொண்டிருந்தன. அந்த ஆராய்ச்சிகளை யெல்லாம் பயன்படுத்தி அடியேன் ஏதோ தெரிந்தவாறு விளக்கியிருக்கிறேன். திருக்குருந்த மாத்தடியில் திருவாதவூரடிகளுக்கு உபதேசித்தருளிய செந்தண்மை பூண்டொழுகுகிற அந்தணனன்றி வேறுயாருமில்லை. அத்தன்மை கொண்டிருக்கிற சிவபெருமான் திருவருளை நினைந்து அடியேன் இந்த நூல் எழுதத் துணிந்தது. இதன்கண்ணேயாதொரு விதமான குற்றங்களிருப்பின் என் பிழையன்று எனது ஆணவமலத்தின் மயக்கமென்று தள்ளிவிடுங்கள். இதன்கண் கிடக்கின்ற நல்ல பொருள்களுக்கு என்னையாண்ட ஆண்டவன்றிருவருள் பொறுப்பாகும். ஆகவே இதன்கண்ணுள்ள குற்றம் நீக்கிக் குணங்கொள்ளுமாறு நட்டம் பயில் நாதனை நாயேன் பன்முறை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பரணி விலாசம்
தூத்துக்குடி
விரோதி வைகாசி 27.

இப்படிக்கு
அடியார்க்கடியான்
**S. C. சுப்ரமணிய பிள்ளை.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

# முகவுரை.

**சிவநேயச் செல்வரீர்!**

அடியேன் திருமந்திரநகருக்குப் பரிசிற்றுறை நாடிச் சென்றேன். அப்பொழுது ராவ்பகதூர் S. C. சுப்பிரமணிய பிள்ளை அவர்களை அன்னாருடைய இல்லமாகிய பரணி விலாசத்தில் பார்த்தேன். அவர்கள் அடியேனை (ஏழு) என்ற எண்ணினுடைய அமைப்பு, பொருள், விளக்கம் முதலானவைகளைப்பற்றிச் சொல்லுமாறு பணித்தார்கள். அவ்வமயம் அப்பணியை அடியேனுந் தலைமேற்கொண்டு அடியேனது அறிவிற்குத் தெரிந்தவாறு விளக்குகின்றேன் என்று ஏதோ சில வார்த்தைகள் புகன்றேன். நீங்கள் தான் அடியேனுக்கு, யான் கொடுத்த பணியை சிரமேற்கொண்டு முற்றிலும் முடித்துக்கொடுக்க வேண்டுமென்று புகன்றார்கள். அன்னாருடைய கடவுள் வழிபாடு, ஒழுக்கம், தோற்றம் முதலானவைகளைக் கண்டவுடன், திருக்குருந்த மரத்தடியில், திருவாதவூரடிகளுக்கு, உபதேசித்தருளிய, செந்தண்மை என்று கொண்டிருக்கிற அந்தணனெனக் கொண்டேன். அறிவை அறிவாலறிந்து, அகத்துறையிலொழுகுகின்ற அன்னாரது பேரறிவு, விளக்கம்பெற விமலன் அருள் புரிவானாக. எது மயக்கத்தைச் செய்கிறதோ அது மாயையெனப் பெயர் பெறும். அம்மாயையாலாகிய பாச அறிவு நீங்கப்பெறாத அடியேனது செயல் எப்படியிருக்கிறதெனில், கல்வி, கேள்விகளில் நுணுக்க அறிவுபெற்றுவிட்டது மாதிரி இருக்கிறது. ஏழு என்ற இலக்கம் இறைவனைப் போன்றது. அவனைத் திருநாவுக்கரசர் “அணுவையார்க்குந் தெரியாத தத்துவன்” எனப் புகன்றார். இவ்

வாறு சொன்னவர் பாச அறிவு, பசு அறிவு கடந்து பதி அறிவிற் றோய்ந்தவர். அடியேன் எழுதப் புகன்ற நூலிற் குற்றங்களிருப் பிற்றள்ளி குணத்தைக் கொள்ளுமாறு சிற்றறிவினன் பன்முறை வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்பு நிலையம்,
திருமயிலை.
விரோதி வைகாசி
27-ம் நாள்.

இப்படிக்கு, உழுவலன்பன்,
**வித்துவான், மு. திருஞானசம்பந்தன்,**
சதாவதானம், சித்தாந்தப் போாசிரியன்,
பல்கலைக் கிழவன்.

---

# தோற்றுவாய்

உலகமான்து இறைவனுடைய திருநடத்திலே தோன்றியது. எப்படித் தோன்றிற்றெனில், முதலில் ஒலி பிறந்து பின்னர் ஒளி பிறந்தது. ஒலியும், ஒளியும் மாறி மாறி வருகிற காலத்தில் ஒருவித சலனமேற்படுகிறது, இதற்குச் சான்று, மேகத்தினிடமாகத் தோன்றும், மின்னலும், இடியே போதுமானது. அப்புறம் பஞ்ச பூதங்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றுகின்றன. அவைகள் கண்ணிற் காணும் உலகைப் படைக்கின்றது. எவ்வாறெனில், தண்ணீர் குளிர்ந்து பதஞ் செய்கிறது, காற்று அடித்துத் திரட்டு கிறது. நெருப்பு சுட்டு ஒன்றுவிக்கிறது. மண்வாசனையைக் கொடுக் கிறது. ஆகாயம் நிரந்தரமாக இடங் கொடுக்கிறது. நுண்ணிய அணுக்களிலே பஞ்ச பூதங்கள் தொழிற்படுகிற பொழுது ஒரு பூதத்தின்றன்மை, மற்ருெரு பூதத்தின்றன்மையைக்காட்டிலும் மிச் சமாக இருந்தால், அந்தந்தப்பூதத்தின் வடிவமாகும். உதாரணமாக தண்ணீர் மிச்சமாக இருந்தால், நெருப்பு, காற்று, மண், ஆகாயம் இவைகளின்றன்மை குறைந்து, சமுத்திரமாகும். இப்படியாக உற் பத்தியாகிற உலகத்திலே மக்கள் தோன்றுகிருர்கள். அந்த மக் களுக்குள் கொடுக்கல், வாங்கல், உண்ணல், உடுத்தல், முதலான வைகள் நடக்க ஏதுவாக, மொழி பிறந்தது. மொழியின் பிறப்புப் பற்றிச்சொல்வதற்கு விரிவஞ்சிவிடுக்கின்றேன். அதற்கடிப்படியாகத் தோன்றியது மொழி பின் எண் அதன் பின்னர் எழுத்து. அந்த எண்களிலே பெரும்பாலும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, வரைக் கும் பத்து எண்களைப் பார்க்கின்றோம். இவைகள் மாறி மாறி உபயோகப்பட்டு வருகின்றன. இந்த எண்களிலே 1 முதல் பத்து வரைக்கும் பத்துவிதமான உண்மைகளை உணர்த்தும்.

உதாரணமாக யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் இறைவன் ஒன்று, சக்தியும், சிவமும் இரண்டு, உயிர், சக்தி, சிவம், மூன்று,

இவைகளோடு திரோதாயி சேரில் நான்கு, அதோடு பஞ்சபூதங்கள் இவைகளெல்லாங் காணப்படாத உலகத்தைக் கூறி, பின்னர் (10ல்) 1 இறை 0 உயிர் மயக்கமாகிய மாயை சேர்ந்து இறை உயிர்கள் கண்களுக்குத் தெரியாததாகிறது. 9 இறைவன் மாயை சம்பந்தப் பட்ட உலகைப் படைப்பதற்காக மனோன்மணி, சர்வ பூத தமனி, பலப்பிரதமனி, கலவிகரணி, பலவிகரணி, சங்கரி, ரௌத்திரி, வாமை, சேட்டை என்றாகிறான். மேலே கண்டதை வலியுறுத்த 9எழுந்தது. எட்டு இறைவன் உலகில் எங்கும் வியாபித்திருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், உயிர் என்ற எண் வடிவினன். 6 மேலே சொல்லிய காணப்படாத இயற்கை, கண்ணாற் காணப்படும் வழிகளைக் குறிக் கிறது. ஏழு (7) என்றஎண், உலகில் இறைவன் இந்த நிலையி லேயே, உண்மையாக ஆகம, வேத, புராண, இதிகாச வகையிலே இருக்கின்றான் என்று அறிகின்றோம்.

ஆகவே நமக்கு இலக்கங்கள் 1 முதல் 10 வரைக்கும் ஒவ் வொரு உண்மையைப் புலப்படுத்துகின்றன. அதுபோல இந்த (7) இருக்கிறதே இதற்குச் சிறப்பாக ஏதாவது உண்டுமா என்பதைப்பற்றி ஆராயப்புகுவான் இந்த நூல் எழுந்தது.

நாம் பெரும்பாலும் ஒவ்வொரு இலக்கங்களையும் ஆராயும் போது, இந்த ஏழு என்பதின் விளக்கம் சிறந்திருப்பது நாலும் காணலாம். முதலாவதாக 7 என்புதை எடுத்துக்கொண்டோ மானால், விந்து, நாதம், சிவம், சக்தி என்ற அரூபப் பொருள் ரூப நிலையை அடைகிற தன்மையைத் தெரிவிக்கிறது. ஒலிக்கவேண்டும், ஒலிக்கவேண்டிய உதவிக்காக உருவம் வேண்டும். இப்பொழுது தான் எழுது கோலை, ஊன்றில்' இந்த அடையாளம் பதியை (கடவுள்) ஞாபகப்படுத்துகிறது. — இந்த அடையாளம் இறை தொழிற்படக் கொண்ட நிலையை அடைகிறது. அப்புறம் | இந்த

அடையாளம், மாயை என்ற பொருளை ஞாபகமூட்டுகிறது. கடவுள் உயிர், தளை (பாசம்) இவைகளை ஞாபகப்படுத்துகிறது. கடவுள் உயிரைப்பற்றி தொழிற்படுத்துவன், உயிர் கடவுளைப் பற்றித் தொழிற்படும், கட்டு (பாசம்) உயிரைப்பற்றித் தொழிற்படும், உயிர் கட்டைப்பற்றி மயங்கும்.

இப்பொழுது சித்தாந்த உண்மைப்படி கடவுள் உயிரைப் பற்றும், உயிர் கடவுளைப் பற்றும், தளை உயிரைப் பற்றும், உயிர் தளையைப்பற்றி மயங்கும் இப்பொழுது தளை இறையைப் பற்ருது, இறை அருளோடு கூடிய உயிரைப்பற்றும்.

இப்பொழுது இறை, உயிர், தளை யாவும் ஒன்ருக 7,* இந்தக் குறியிட்ட இடத்தில் உயிரோடு இருக்கின்றன என்று தெரிகிருேம். இப்பொழுது நாம் "செம்மலர் நோன்ருள் சேரலொட்டா, வம்மலம்" என்ற சிவஞான போதச் சூத்திரத்தை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் நிகழலாம். இறை உயிரைப் பற்றுகிறபொழுது, உயிரைத் தளை (பாசம்) பற்றுமா என்று, உதாரணமாக இறைவன் உயிரினிடத்தில் அருளாக இருக்கின்ருன், உயிர்க்குள் ளுயிராகியுமிருக்கின்ருன். அப்பொழுது பாசம், இறையையும் அருளையும், இறை இருக்கிறபொழுதே, தெரிய வொண்ணுதபடி மறைக்கின்றது. அந்தக் காலத்திலே மூன்று பொருளும் ஒருமித்திருப்பதைக் காண்கின்ருேம். இந்த நிலையை இந்த 7 என்ற இலக்கம் உலகினர்களுக்குத் தெளியவைக்கு முகத்தானே வந்தது ஏழு என்று சொல்கின்ற இலக்கம் இலக்கங்கள் எல்லாவற்றையும்விடச் சிறந்தது. ஆகவே இந்நூல், பதியியல், பசுவியல், பாசவியல், ஒப்பியல், ஒழிபியல் என்ற ஐந்து அதிகாரங்களை வைத்து ஆக்கப் பெறுகின்றது.

# நூல்.

## பதியியல்.

இனிமேல் தமிழிலே ஏழு எவ்வாறு எழுதுவோம் என்றால் எ, இவ்வாறு எழுதுவோம். O T இவ்வாறு தமிழிலே ஏழு உற்பத்தியாகிறது. இதனிலே அகர, உகர, மகரம் தோன்றுகிறது. அகர எழுத்தின் சுழியும், உகர எழுத்தின் கோடும், மகர எழுத்தின் ஆரம்பக்கோடுந் தோன்றுகிறது. ஆகவே இந்த எ என்ற எண்ணிக்கையிலேயே உலகமானது தோன்றுகிறது.

இவைகளை வைத்து எப்படி உலகம் தோன்றும் என்று ஐயப்பாடு உண்டாகுமிடத்து வேதாந்த முறைப்படி, குணங்கள் மூன்று பிறக்கின்றது. அவைகளாவன, தாமதம், சாத்வீகம், இராசதம். இவைகள் மூன்றும் தொழிற்படுகின்றன. இப்படித் தொழிற்படுகிறபொழுது, தாமத குணம், படைத்தலையுஞ் சாத்வீக குணங் காத்தலையும், இராசத குணம் துடைத்தலையுஞ் செய்கின்றன.

ஆகவே O சிவனையும், — இந்தக் கோடு பிரம்மனையும், — இந்தக் கோடு திருமாலையும் ஞாபகமூட்டுகிறதாக வேதாந்த சாத்திரங்கள் சொல்கின்றன. இதற்குதாரணமாக இந்த மூன்று குணங்களையுஞ் சீர்தூக்கிப் பார்க்கத் தன்னோடு சாத்வீகம்இரண்டு சேர்த்து ஆக ஐந்து. ஆக ஐந்து குணங்களாக மாறுகின்றன என்று சித்தாந்த சாத்திரஞ் சொல்லிக் கிடக்கின்றது.

அதெப்படியெனில் சாத்வீக குணமானது, தாமத, இராசத குணங்களைக் காட்டிலும் மேலானது. காக்கும் தொழில் நடைபெறுவிடில் படைத்துப் பயனில்லை. படைத்த பொருளைக் காத்துக் கொடுக்காதுபோனால் அழிப்பதற்கு ஏதுக்கிடையாது மேற்

கொண்டும் அருளாகிய, சாத்வீகத்திற் சாத்வீகத்தாற் வீடடைய வேண்டும். சாத்வீகத்தில் இராசதத்தால் நரகங் கிடைக்கும். இதைக் காண்பிக்கு முகத்தானே "சிற்குணத்தர் தெரிவருநன்னிலை, எற்குணத்தரிதெண்ணிய மூன்றனுள், முற்குணத்தவரே முதலோர்வர், நற்குணக்கடலாடுத நன்றரோ" என்று கம்பர் சொன்னார்.

இந்த மூன்று குணங்களையும் வாதுளாகமம் தமிழெழுத்துக்களிலேயுள்ள ஃ மாதிரி இருக்கின்றது என்று சொல்கிறது. இதில் (1) o இக்குறி தாமதமென்றும், (2) o இக்குறி சாத்வீகமென்றும், (3) o இக்குறி இராசதமென்றும் இந்த இரண்டு குணங்களையுஞ் சாத்வீக குணமே நடத்துகின்றது என்று சொல்கின்றது. தமிழிலக்கமாகிய எ லே கடைசியாக | மகரவடையாளமாகத், திருமாலை நினைப்பூட்டுகின்றது. ஆகவே மேற்படி அடையாளம் மேலே கண்ட, ஆகம சம்பந்தப்படி மற்றைய இரண்டு அடையாளங்கட்கும் ஏதுவாக இருக்கின்றது. அருளல், மறைத்தல் உலகத்தில் உள்ள உயிர்களிடத்தில் நடத்திக் காண்பிக்க வரும் என்று திருமாலது குணமாகிய சாத்வீக குணத்தை மூன்றுவது கொடுத்திருக்கின்றது.

அப்புறமாக இந்த எ, ஏழென்ற இலக்கம் ஓம் என்ற பிரணவமாக மாறுவதற்கு ஏதுவாக இருக்கின்றது. முடிவாக உலகம் பிரணவ ஒலியை ஒலித்துக்கொண்டு இருக்கின்றது. நடமாடுகின்ற பெருமானது நடன ஒலியும் இதுதான் உலகத்திலுள்ள சகல பொருளும் இதையே சொல்கின்றது.

உதாரணமாக சமுத்திரக் கரையில் நின்று பார்க்கவேண்டும். ஒரு அலையானது ஒ வென்று சப்தித்துக்கொண்டு கரையில் வந்து மோதுகிறபொழுது,ம் என்ற மகர வொற்றைச் சொல்லி முடியும். நாம் எந்தவிதமான சப்தத்தை உண்டு பண்ணினாலும், ஓங்காரஞ் சப்தித்து நிற்கும். உதாரணமாக மத்தளம் அடிக்கப் பழகுகிற காலத்தில், தா, தீ, தோம், நம், என்ற இந்த நான்குந்தான் முக்கிய

மாகச் சொல்லிக்கொடுக்கப்பெறும். இவைகளில் ஓங்காரஞ் சப்திக்கின்றது இவைகள்தாம் நட்டமாடிய நடராசன் உண்டுபண்ணி, ஆடுஞ் சப்தங்கள் என்று சொல்லுகிறுர்கள். "தாஙததீம் தீந் தின்னத்தாம்" கஞ்சரா வாசிக்கப் போகின்ற காலத்தில தெரிகின்ரேம். இதனிலேயும் ஒங்கார சப்தமாகியது ஒலித்துக்கொண்டிருப்பதைக் காண்கின்ரேம்.

அப்புறமாகச் சங்கீதத்திற்கு வருவோமானுல், "சரிகமப தநிச" என்று ஏழு வகை எழுத்துக்களை ஒலித்துக்கொண்டு, இதன் மூலமாக உருவாகிறது. இவைகள் ஏழு வகை மூர்த்திகளை உண்டுபண்ணி ஏழு வகை உலகத்தைப் படைக்கிறது என்று சாம வேதத்தினுலறிகிரேம். இவைகளேழும் ஏழு கிரகங்களை (சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி" உற்பத்தி செய்கின்றது. நீலகண்ட பாடியத்திலே தெரிய வருகின்றது.

இன்னும் 7 என்ற இலக்கத்திலுள்ள நிலையை மேனுட்டவர்கள் Seven Sight For Sure eyes என்று கூறியிருக்கின்றதையுந் தெரிகின்ரேம். மேனுட்டவர்கள் 9 என்ற இலக்கமும் ஒருவாறு இறையைப் போன்று பொருந்தும். ஆனுலும் அது தீய நிலையைச் செய்கிறது. ஏழு என்ற இலக்கம் எவ்விதத்திலேயும் தீமையைச் செய்வதில்லை. (9) என்ற எண் கேட்டையும் அழிவையுங் கொடுக்கக்கூடியது என்று இலக்கக் குறி பல பாவ சாத்திர நூலாசிரியர் புகன்றிருக்கின்ருர்.

ஆகவே நம் எ என்ற தமிழிலக்கம் பரமாத்துமா, ஜீவாத்துமா, உலகம், பிரம்மா, விஷ்ணு, சிவன், பதி, பசு, பாசம், சிவன், சக்தி, உலகம் என்று பலவாறு பிரிந்து வேண்டிய ஞானேபதேசஞ் செய்து நிற்கின்றது.

ஞான பூமிகள் ஏழு இருக்கின்றன. அவைகளிற் கடைசியாகத் துவாத சாந்தங் கடந்து துரியாதீதம் வரைக்கும். இதைக் குமர குருபர சுவாமிகள் மதுரை மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் முத்தப் பருவத்துள் "துவாத சாந்தப் பெருங்கடலுள் துரியங் கடந்த பரநாத" என்று சொல்லியிருப்பதால் அறியத் தெரிந்துகொள்ளு மாறு வைத்திருக்கிறார்.

இன்னும் கீழுலகங்கள் ஏழு மேலுலகங்கள் ஏழு என்று சொல்லி இருக்கின்றனர்.

மேகங்கள் ஏழு என்று சொல்லியிருக்கின்றது. இவைகள் யாவும் ஒன்றுகூடி மழை பெய்யவேண்டும். அந்தக் காலத்தில் ஏழு கடல்களும் பொங்கி உலகின்மீது வரும். அப்பொழுது இந்தக் கலியுகம் முடிந்து நன்மையாகிய கிரேயுதா, திரேயுதா, துவாபரயுகங்கள் பிறப்பதற்கு ஏதுவாகும் என்றார். இன்னொரு விதம் ஏழு கடலுக்கும் அப்பாலிருக்கிற வடமுகாக்கினி ஏழு நாவு களையும் நீட்டி யழித்து நன்மையான உலகத்தைச் சிருட்டிப்பான் என்று சொன்னார்கள்.

மேற்கொண்டு சூரியனது தேரிற் பூட்டிய குதிரைகள் ஏழு என்று சொன்னார்கள். இன்னும் அவனுக்குச் சிறப்பாக உடைய நிறங்கள் ஏழு என்று சொல்லியிருக்கின்றார்கள். இன்னும் நரகங் களிலேயும் ஏழு வகையான நரகங்கள் இருக்கின்றன என்று கருட புராணங் கூறுகிறது. உலகத்திலே அரூபமாக இயங்கிக் கொண் டிருக்கும் பொருள்கள் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோ தாயி, உயிர், இறை என்ற பொருள்கள். ஆணவம் என்பது உயிர் களிடத்திலே எழுகின்ற அகங்காரமாகிய தன் முனைப்பு. இது கெட்டுவிட்டால் இறைவனுடைய தாளிலுயிர் நின்று முத்தியடை யும். கன்மம் என்பது உயிர் செய்கிற புண்ணிய பாவங்களுக்கு ஏதுவாகிய பலன். அந்தப் பலனானது இந்தத் தேகத்தைக்

கொடுக்கும். அவைகள் மூன்று. அவையாவன, சஞ்சிதம், பிராரத்வம், ஆகாமியம். மாயை என்பது மயக்கம் உயிர்களது நல்ல அறிவை மயக்கிக் கெட்ட வழியைப் பற்றச் செய்யும். மாயேயம் என்பது மாயை தொழிற்படுங்காற் பெறுகின்றபெயர். திரோதாயி என்பது உயிர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதற்காக அநுக்கிரகிக்கப்படுவது.

வாண வேடிக்கை நிகழ்கின்ற காலத்தில் நாம் ஆகாயத்தைப் பார்த்தோமானால் அங்கே இருந்து பலவிதமான நிறமுடைய பொறிகள் ஆகாயத்தில் சிதறி வருகிறதைப் பார்க்கிறோம். அந்தக்காலத்தில் அங்கே தோன்றுகிற வர்ணங்களைக் கூர்மையாக எண்ணிப் பார்ப்போமானால் ஏழு வகையான வர்ணங்கள் தோற்றும்.

இன்னும் இருக் வேதத்தையெடுத்து ஆராய்ச்சி பண்ணிப் பார்க்கின்ற பொழுது கடவுளை வழிபடுகிறதற்காக ஏழுகோடி மகா மந்திரங்கள் இருக்கின்றன என்று சொல்கின்றது. இது பஞ்சாக்கர மந்திரத்திற்கு விளக்கங் கொடுக்கின்ற இடத்திலே காணலாம்.

ஆயர் பாடியில் ஏழாவது அவதாரமாகப் பலராமர், யசோதை வயிற்றிலே உற்பத்தியாகின்றார். பரசுராமர், ஜமதக்கினி மகா முனிவர், ரேணுகா தேவி இவர்களுக்கு ஏழாவது குழந்தையாக அவதரிக்கின்றார். மாபலி, பரசுராமன், மார்க்கண்டன், அசுவத்தாமன், அனுமார், சாம்பவான், விபீஷணன் என்று ஏழுபேர் இன்றும் இறவாமல் சிரஞ்சீவியாகஇருக்கின்றார்கள் என்று சொல்கின்றது.

மகா பாரதத்திலே சப்த பலவான்கள் பதினாயிரம் யானைப் பலம் பெற்றவர்கள் என்று சொன்னார். அவர்கள் தங்களை ஒருவர்க்குள் ஒருவரேதான் கொல்ல முடியும். அதில் முதலாவதாக யார் ஒருவனைக் கொல்கிறானோ அவனே மீதமிருக்கின்ற ஆறு பேர்களையுங் கொல்வான் என்றுஞ் சொல்கின்றார். அவர்கள் பெயர்களா

வன, பீமன், துரியோதனன், கீசகன், சராசந்தன், பகாசூரன், வாரணாசூரன், இடும்பன்.

தட்டான் தங்கம் உருக்கி விடுகிற மாதிரியை ஒத்து இறைவனானவன் அன்பு கொண்டு அருளோடு மாயையினால் தொழிற்படுகின்ற உலகத்திலே ஊடுருவி எங்குமாய், யாவுமாய், எவையுமாய் இருக்கின்றான்.

இன்னுஞ் சித்தாந்த சாத்திரத்திலே உண்மை விளக்கம் என்ற நூலிற் கூறியிருப்பதாவது உயிர்களிடத்தில் அறிவு விளக்கம் பெற வேண்டுமானால், கீழே கண்டவாறு கூறியிருக்கின்றார்கள். (1) தத்துவ ரூபம் (2) தத்துவ தரிசனம் (3) தத்துவ சுத்தி (4) ஆன்ம ரூபம் (5) ஆன்ம தரிசனம் (6) ஆன்ம சுத்தி (7) சிவரூபம் இந்த ஏழாவது நிலைக்கு மேலாகத்தான் ஒரு ஆன்மா பதியையே அடைகின்றது.

(1) தத்துவ ரூபம் என்பது தத்துவமும் உயிரல்ல என்று தத்துவங்களைப் பற்றி அறிதல்.

(2) தத்துவ தரிசனம். உயிரானது தத்துவங்களைக் கண்டு, அவைகளின் செயலை அறிந்துகொள்வது.

(3) தத்துவ சுத்தி. உயிரானது தத்துவங்களுக்கு அப்பாற்பட்டது என்று கண்டுகொண்டு அவைகளின் செயலைக் கடந்து நிற்பது.

(4) ஆன்ம ரூபம் இறையானது உயிரைவிட்டுப் புறம்பானவன் என்று தெரிந்துகொள்ளல்.

(5) ஆன்ம தரிசனம் இறையானது உயிரோடு சேர்ந்து இருப்பது. உயிர்க்குரிய சலனங்கள் அவனைப் பற்றாது நிற்பதைத் தெரிந்துகொள்ளல்.

(6) ஆன்ம சுத்தி. இறையானவன் உயிருக்கு அப்பாற்பட்டவன், ஆன்மா இறையோடு சம்பந்தப்பட வேண்டுமென அறிதல்.

(7) சிவரூபம். சிவமானது உயிரையும் மாயையும் விட்டுப் புறம்பானதென்று அறிதல்.

சின் முத்திரைகள் ஏழு வகைப்படும் அவைகளது பெயர்களை வேதாந்த நூல்களிற் பரக்கக் காணலாம். சின் முத்திரையின் இலக்கணமாவது ஆட்காட்டி விரலைப் பெருவிரல் வரையில் சேர்த்து மற்றைய மூன்று விரல்களையும் நீட்டிய நிலையாம். பெருவிரல் (இறை) ஆட்காட்டி விரல் (உயிர்) பாம்பு விரல் (ஆணவமலம் = தன் முனைப்பு) மோதிர விரல் (கன்மம்) சுட்டுவிரல் (மாயை) உயிரானது ஆணவம், கன்மம், மாயை, இவைகளோடு சேர்ந்து உலகத்தில் தொழிற்படுகின்றதென்பதை, ஆட்காட்டி விரல், பாம்பு விரல், மோதிர விரல், சுட்டு விரல் இவைகளோடு சேர்ந்திருக்கும் நிலையில் ஞாபகமூட்டுகின்றது. பெருவிரல் தனித்து நிற்பது, உயிர், ஆணவம், கன்மம், மாயை, முதலிய இவைகளோடு பெருவிரல் கையிலிருந்தாலும் மற்ற விரல்களோடு சம்பந்தப்படாததே போல், உலகத்தில் கடவுளானவர், உயிர் மலங்களோடு சேர்ந்திருந்தாலும், அவைகளோடு சம்பந்தப்பட மாட்டான் என்பதைக் காட்டுகின்றது. சின் முத்திரை பிடிக்கிறபொழுது, சுட்டு விரல், பெரு விரலைத் தொடுவதினால், உலகிலுள்ள உயிர்களெல்லாம் இறைவனுடைய திருவடி நீழலை யெய்தவேண்டிய வழியைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதாம். இந்த யோக பாவனையைத்தான் இறைவன் கல்லால மரநிழலில் நான்கு முனிகளுக்கு உபதேசிப்பதும் சிவன் கோவிலிலுள்ள தக்ஷிணாமூர்த்தியும் என்று தெரிந்து கொள்க.

ஞானம் அடையப் போவதற்குரிய நிலைக்கு முன்னதாக உயிரவஸ்தைகள் ஏழு. அவையாவன (1) அஞ்ஞானம், (2) ஆவரணம், (3) விக்ஷேபம், (4) பரோக்ஷ ஞானம், (5) அபரோக்ஷ ஞானம்,

(6) துக்க நிவர்த்தி (7) தடையற்ற ஆனந்தம்.

(1) அபரோக்ஷம் :- தன் உண்மை வடிவை நிலையா திருத்தல்.

(2) ஆவரணம் :- நம்மை நடத்துகின்ற சிவன் நமக்குள்ளிருந்தால் நமக்குத் தெரியாதா என்று நினைத்திருத்தல்.

(3) விக்ஷேபம் தன் உண்மை வடிவை மறந்து, தனு, கரண புவன, போகத்திற் படிந்து உடம்பின் தொழிலை உயிரின் தொழிலாக நினைத்து பாவ புண்ணியத்திற்படிந்து பிறப்பையடையும், உயிர்தானென இருந்து கொண்டிருப்பது.

(4) பரோக்ஷஞானம் காரியகுருவாலும் நூல்களிற் கூறியிருப்பதைப் பார்ப்பதாலும் காட்சி மாத்திரமாயிருக்க வேண்டிய ஆன்மாதானென்று வாசா ஞானமாய் உணர்தல்.

(5) ஞான நூல்களை ஆராய்ந்து, காரணகுருவால் (ஞானசிரியர்) தீக்ஷையும் உபதேசமும் பெற்று, சகல சந்தேகங்களுமற்ற, தன் நிஜரூபத்தையறிந்து, தாடலையின்பம் பெற்று, தானற்று அவனாக நிற்கும் நிலையை (அத்துவிதம்) அனுபவமாயடைதல்.

(6) தான் உயிரென்றும், கர்த்தா, போக்தா என்று கருதாது பாவ புண்ணியச் சம்பந்தமின்றி, பிறப்பை நீக்கி, இவைகளுக்கு விருப்பு வெறுப்புக்களை நீக்கி இன்ப துன்பத்தையும் விட்டு நீக்கி இருப்பது.

(7) தடையற்ற ஆனந்தம் :- சகல துன்பங்களையும் விட்டு நீங்கி உலகியற் தொழிலற்று இறையடியைப்பற்றி, சச்சிதானந்தப் பொருளின் பேரின்பப் பெருக்கில் மூழ்கி

ஒன்றும் வேண்டிக்கொள்ளாத பூரண திருப்தியடைந்திருப்பதே தடையற்ற ஆனந்தமென்று பொருள்படும்.

சப்த கன்னியர்கள் இருக்கின்றார்கள் என்று பொருள் நூல்களிற் கூறுகின்றார்கள்.

இறைவனுடைய பேரின்பக்கடலிற் றோய்ந்து இறப்பு பிறப்பு இருப்பு என்ற முத்தொழிலை விட்டு, இறந்தகாலம் நிகழ்காலம், எதிர்காலம், என்ற முக்காலங்களுமற்று என்றும் ஒரே படித்தாக இருக்கின்றார்கள் இவர்கள் சப்த ரிஷிகள்.

பிரகிருதி மாயையிற் புருட தத்துவங்கள் ஏழு, காலம், நியதி, கலை, தத்துவம், வித்தை, அராகம், புருடன் என்ற தொடக்கத்துள்ளன. இவைகள் சகல நிலையிலுள்ள 24 தத்துவங்களுக்கு மேலாக உள்ள நிலையாம் இவர்கள் சகலர் என்று பெயர் பெறுவர், புருட தத்துவத்திலுள்ள உயிர் பிரளயாகலர்கள் என்று பெயர் பெறுவர். மேலாவதாகவிஞ்ஞானகலர் என்று பெயர் பெறுவர். சித்தாந்த சாத்திரங்களிற் கண்டு தெளிக இவண் விரிவஞ்சி விடுக்கின்றனம்.

இறைவனது திருவடி நிழலில், பேரானந்தக் கடலில், மூழ்கியிருக்கின்ற அடியார்கள் அறுபத்துமூன்று நாயன்மார் சரிதம் எழுதப்புகன்ற சேக்கிழார் சுவாமிகள் அவர்களை ஏழு வகையாகப் பிரித்துப் பெரிய புராணம் இயற்றி இருக்கின்றார்கள். அவைகளது நுணுக்கங்களைத் திருத்தொண்டர் பெரிய புராணத்துள் கண்டு கொள்க.

இராமாயணஞ் சொல்ல வேண்டுமென்று புகுந்த கம்ப நாட்டாழ்வார் 1216 செய்யுட்களை ஏழு காண்டமாக விரித்துக்கூறினர். அவையாவன, (1) பாலகாண்டம், (2) அயோத்தியா காண்டம், (3)

ஆரண்ய காண்டம், (4) கிட்கிந்தா காண்டம், (5) சுந்தர காண்டம், (6) உயுத்த காண்டம், (7) உத்தர காண்டம் முதலாகிய ஏழுமாம்.

ஏழு என்பது ஆரியத்தின் கண்ணே சப்தம் என்று பெயர். அதைத் தமிழிற் கொண்டு வந்தாலோ ஒலி, அல்லது ஓசை என்று பொருள்படும் ஆகவே இந்த ஏழு என்ற இலக்கத்தில் இறைவன் இருக்கின்றான், உயிர்கள் இருக்கின்றன, 224, புவனங்கள் இருக்கின்றன. முதலாவது மொழிக்கு ஒலிதான் பிறந்தது பின்னர் வடிவம் பிறந்தது. இதனால் 7 என்ற இலக்கமே உலகத்தின் தோற்றம், ஒடுக்கம் முதலான சகல தொழில்களுக்கும் மேலாக இருக்கின்ற சச்சிதானந்தப் பொருளேயாகி நிற்கின்றது என்று அறிவோம்.

## பசுவியல்

---

உலகத்திலுள்ள உயிர்களை —— இந்தக் குறியிட்ட இடம் ஞாபகமூட்டுகிறது. தமிழிலக்கமாகிய எ, என்ற எண்ணிலேயும் அக்குறி இருப்பதைப் பார்ப்பீர்களாகவும். பார்த்தால் விளங்கும். உயிர் வர்க்கங்களெல்லாம் ஏழு வகைத் தோற்றத்திற்குள்ளடங்கிவிட்டன. ஏழு பிறப்பு ஒரு உயிரானது பிறக்கின்றது. அந்த ஏழு பிறப்புக்களிலேயே உயிரானது உண்மை ஞானத்தையறிந்து கடவுளையடைந்து முத்திக்கேதுவாகத் தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டியது. முத்தி என்பது ஆரிய வார்த்தை. அதற்குத் தமிழிலே விடுதலையென்று பொருள். இந்த விடுதலை உயிர்களுக்கு ஏற்பட, பிறப்பிறப்புகளிலேயிருந்து விடுதலையடைவது. அது எங்கே கிடைக்குமென்றால் "அறவாழி யந்தணன், தாள்சேர்ந்தார்க்கல்லால், பிறவாழி நீத்தலறிது" என்று திருவள்ளுவர் புகன்றிருக்கின்றார்.

திருவள்ளுவர்கூட ஒருவன் ஒரு பிறவியில் உண்மை ஞானத்தை உணர்ந்துகொண்டால் ஏழு பிறவிகளுக்கு அந்த ஞானமானது அந்த உயிரைவிட்டு நீங்காது என்று கூறியிருக்கின்றார்.

சோதிட முறைப்படி எடுத்துக்கொண்டோமானால் கிரகங்கள் ஒன்பதிற்கும் பார்வை இருக்கின்றது என்று காண்கிறோம். அந்தப் பார்வைகள் பலவாறாகச் சொல்லப்பட்டிருந்தாலும், எல்லாக் கிரகங்களுக்கும் ஏழாம் பார்வைதான் மேலான நிலையென்று சொல்கின்றது. சோதிடத்தில் 12 வீடுகள் உண்டு அந்தப் பன்னிரண்டு வீடுகளிலேயும் ஏழாவது வீடுதான் மணப் பொருத்தம். அந்த வீட்டை வைத்து மனிதனுடைய இன்பத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

இன்னும் சிலம்பம் முதலிய விளையாட்டுகளில் ஏழாவது அடி தெரிந்துகொண்டால் அவனை வெல்வது துர்லபம்.

உலகத்திலே மக்கள் தோன்றினார்கள். அவர்கள் இப்பொழுதிருக்கிற மக்களைப் போன்று ஆராய்ச்சி அறிவு பெற்றிருந்தவர்களாகத் தெரிய வரவில்லை. பழைய காலத்திய கற்கால மனிதர்கள் அவர்கள் பின்னவர்களெல்லாம் பல பல இடங்களிலே குடியேறினார்கள். ஒருவாறு தமிழ் நூல்களுக்கு இலக்கணம் வகுத்தருளிய தொல்காப்பியர் அறுதியிட்டுப் புகன்றதை நோக்குவோம்.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியென்றார். இந்நிலத்திலே உள்ள மக்கள் மலைகளிலே வாசம்பண்ணி அங்கே உள்ள பொருள்களை உணவாகக் கொண்டார்கள். ஆகவே இவர்கள் குறவர், வேடர் எனப் பெயர் பெற்றனர். இந்த நிலங்களிலே இயற்கைவளஞ் செறிந்து கிடப்பதினால் இங்கே உள்ள மக்கள் பெரும்பாலும் போகத்தில் விருப்பமுடையவர்களாக இருந்தார்கள். ஆகவே இத்திணைக்குப் புணர்தல் உரிப்பொருள் என்றார்.

காடுங் காடு சார்ந்த இடமும் முல்லையென்று பெயர் பெறும் இதிலே பெரும்பாலும் குடியிருந்த மக்கள் பொதுவர், ஆயர், எனப் படுவர் ஆகவே இங்கே மக்கள் மாடு ஆடுகளை வைத்துக்கொண்டிருந் தார்கள். இங்கே பெரும்பாலும் ஆண்கள் பகலில் ஆடுமாடுகளை மேய்க்கச் சென்றுவிடுவார்கள். பெண்களெல்லாம் மாலை வரைக்கும் ஆடவர்களுடைய வரவை எதிர் பார்த்துக்கொண்டிருப்பதினாலே இருத்தல், இத்திணைக்கு உரிப்பொருள் என்றார்.

பாலைவனமும் அது சார்ந்த இடமும் பாலையெனப்படும். அங்கே உள்ள மக்களோ யாதொரு தொழிலுமின்றித் திருடுவது தொழிலாகக் கொண்டார்கள், இவர்கள் மறவர்கள் என்று சொல்லப்பெற்றார்கள் இங்கே இருக்கின்ற திருடர்களால் பல தீமை நிகழ்வதினாலேயும், இது மனித சஞ்சாரத்திற்கு ஏற்ற இடமாக இல்லாமலிருப்பதினாலேயும், இத்திணைக்கு உரிப்பொருள் பிரிதல் என்றார். இரக்கங்கொண்டு என்ன நடந்ததோ என்று அங்கலாய்த்தல்.

வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் என்று சொல்லப்படும் இதில் மக்கள் உழவு தொழிற் செய்வார்கள் ஆனதினாலே இங்கே உள்ள மக்கள் உழவர் எனப்பட்டனர் இது மிகவுஞ் செழித்து மக்கள் சஞ்சார மிகுதியாக உள்ள இடம். ஆடவரும் பெண்டிரும் இங்கே பெரும்பாலுஞ் சந்தேகித்துப் பிணங்கிக் கொண்டிருப் பதினாலே இத்திணைக்கு உரிப்பொருள் ஊடல் என்று சொன்னார்.

கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் என்று பெயர் பெறும் இங்கே உள்ளவர்கள் உப்பு விற்றலும் மீன் பிடித்தலுந் தொழி லாகக் கொண்டார்கள். ஆனதுபற்றி இவர்கள் பறவர் எனப்படுவர் இரங்கல் இத்திணைக்கு உரிப்பொருள்.

உலகிலுள்ள மக்களெல்லாம் இறக்கின்ற காலத்தில் மிகுதி

யாகத் துக்கங்கொண்டு வருந்துகின்றது கைக்கிளையென்ற பெயர் பெறும் இத்திணைக்கு நிலங்கிடையாது.

உலகிலுள்ள மக்கள் கண்ணால் காணும் பொருள்களெல்லாம் அழிகின்றன. நாமும் அழிந்து விடுகின்றோம். நமது இளமையுஞ் செல்வமும் எப்பொழுதும் நிலையாது. ஆகவே நிலையாமையைக்கண்டு, நித்தியப் பொருளைக்காண விளைவதே பாடாண்டினை.

மேலே கூறிய ஏழு திணைகளும் அகத்திணையென்று பெயர் பெறும். இவைகளுக்கு புறத்திணைகள் ஏழு உண்டு. அவைகளைத் தொல்காப்பியத்திற் கண்டுகொள்ளலாம். உலக நிலப்பிரிவு, உட் பிரிவு ஆகிய இவைகள் ஏழும் விளக்கிய முறையினாற் கண்டுகொள்க.

மக்கள் நாட்களைக் கணக்கிட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமையென்று ஏழு நாட்களாகக்கொண்டு இவைகளிலிருந்து வாரம், பட்சம், மாதம், வருடம் என்று கணக் கிட்டுக் கொண்டார்கள்.

விவிலிய மதம் (கிறிஸ்தவம்) ஆண்டவன் ஆறு நாட்களும் உலகத்தைப் படைத்து ஏழாவது நாளாகிய ஞாயிற்றுக்கிழமை யன்று விடுபடுகின்றான் என்றும் ஆகவே அந்த நாள் ஓய்வு நாளென் றுங் கொள்கின்றார்கள்.

மக்களுக்கு நவத்துவாரங்கள் உண்டு. பெண்களாக இருந் தால்கூடவும் உண்டு. பெண்ணானலும் ஆணானலும் முகத்தின்கண் இரு பாலாரும் ஏழு துவாரங்களைப் பெற்றிருக்கின்றார்கள், அவை யாவன:- கண்கள் 2, காதுகள் 2, மூக்குத் துவாரம் 2, வாய் 1 மற் றுந் துவாரங்கள் முகங்களிற் கிடையாது. ஏழுதான் உண்டு.

பன்னிருபாட்டியல் என்றது பிரபந்தங்கள் (நூல்கள்) இலக்

கணம் சொல்கின்றது. அதனில் உலா என்ற ஒரு வகை நூல் சொல்லப்படுகின்றது. உலா என்ருல், ஒரு அரசனே அல்லது இறைவனே பவனி வருகிருன். அப்பொழுது தெருவிலுள்ள பெண்களெல்லாம் உலாப் போந்தவனைப் பார்க்கின்ருர்கள். பார்க்கின்ற காலத்திலே அவன் மீது ஆசை கொள்ளுகிருர்கள். அப்பெண்கள் கூட்டத்தை ஏழு வகையாகப் பிரித்திருக்கின்ருர். பேதை, பெதும்மை, மங்கை=கன்னி,மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண், என்று குறிப்பிட்டிருக்கின்ருர். இவைகளினது விளக்கத்தை பன்னிருபாட்டியல், தொல்காப்பியம் முதலிய நூல்களிற் கண்டுகொள்ளுங்கள்.

வளர்தல் ஓரறிவு (தாவரம்) வாசனை நுகர்தல் இரண்டாவது அறிவு (எறும்பு) உருவங்காண்டல் மூன்ருவது அறிவு (தும்பி) நகர்தல் நான்காவது அறிவு (பாம்பு, மீன்) விலங்குகள் ஐந்தாவது அறிவு பெற்றவை (கைகளில்லாதவை) ஆருவது அறிவு பகுத்தறிவு (மானிடர்) இதற்கு மேல் ஒரு அறிவு உண்டு அதுதான் (ஞானம்) இந்த ஏழாவது அறிவு பெருத எவ்வுயிரும் உய்வினை காணுது. இது பற்றி முன்னுல் பதியியலில் விளக்கமாகக் கூறியிருக்கின்ருேம். இவண்மிகு மென்று விடுகின்றனம்,

தமிழ் மொழியில் நெடிலெழுத்துக்கள் ஏழுஉண்டு. அவைகள் முறையே ஐந்து குறிலில் பிணைப்புண்டிருக்கின்றன. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பவைகளாம். ஆ ஐ இரண்டு எழுத்துக்களும் அ விலும் ஈ என்ற எழுத்து இ விலும், ஊவென்ற எழுத்து உ விலும் ஏ என்ற எழுத்து எ விலும் ஓ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களும் உ, ஒ விலும் தோன்றுகின்றன. இன்னும் அ வும் இ வுஞ் சேர்ந்து ஐ வாகின்றது உ வும் ஒ வும் சேர்ந்து ஔ வை உண்டு பண்ணுகிறது என்று தெரிகிருேம்.

தமிழ் மொழிக்கு மேலும் ஒரு சிறப்பு உண்டு அந்தச் சிறப்பு

எது எனக் கேட்பீர்களாயின் கீழே விளக்குவதாலறியவும். (1) அ, (2) ஆ, (3) இ, (4) ஈ, (5) உ, (6) ஊ, (7) எ, ஆகிய மொழியை எடுத்துக் கொண்டால் அந்த மொழிக்கு எ என்ற எழுத்தே கிடையாது ஆங்கிலமொழியை எடுத்துக்கொண்டால் a முதலாவதே தோன்றிவிடுகின்றது. மேற்கொண்டும் தமிழ் எழுத்திலுள்ள எ வின் உச்சரிப்பு இதற்குக் கிடையாது. a என்று சொல்லுகிற பொழுது தமிழெழுத்து எ வின் உச்சரிப்பிலிருந்து கொஞ்சம் ஒலியைக் குறைத்துக்கொண்டு a என்ற ஆங்கில எழுத்து உச்சரித்துக்கொண்டு நிற்கும். தமிழ் மொழி இறை சப்பந்தம் உடையது.

அமெரிக்காவில் டாக்டர் Sung என்ற ஒருவர் பெண்களுடைய கர்ப்பத்தில் உள்ள சிசுக்களும் தமிழெழுத்திலுள்ள எ வும் பொருத்தமாக இருக்கின்றதென்கிறார். எப்படியென்றால் போகத்தில் எழுந்த விந்து நாதத்திற் சேர்ந்து கருப்பையை அடைகிறது. அந்தக் காலத்தில் O இந்த உருவத்தை அடைகிறது. அப்புறமாக மாதங்கள் ஒன்று இரண்டு மூன்று ஆக P இந்த நிலையை அடைகிறது என்று சொல்கிறார். நான்கு மாதம் ஐந்து மாதம் ஆனபின் P இந்த நிலையை அடைகிறதென்றும் ஆறு எழு மாதம் ஆன பிற்பாடு உ இந்த நிலையை அடைகிறதாய்ச் சொல்கிறார். ஆக கருப்பையில் எழு மாதங்கள் ஆகின்றன அப்பொழுதுதான் உயிரைப் பெறுகிறது என்று சொல்கிறார். ஆகவே குழந்தைகள் உயிரைப் பெறுவது எழாவது மாதம். அதற்கு முந்திய மாதங்களில் உயிர் கிடையாதா என்று பார்த்தால் டாக்டர் Sung சொல்கிற பிரகாரம் உயிரில்லையென்றுதான் கொள்ளவேண்டியிருக்கின்றது. பெண்களுக்கு நாலாவதுமாதம் மூன்றாவதுமாதம் ஐந்து மாதங்களிற் காய் விழுந்துவிடுறது. அப்பொழுதுபார்த்தால் வெறும் பிண்டமாக இருக்கிறதே தவிர உயிரிருக்கிறதாகத் தெரியவில்லை. எழு மாதத்திற்கு மேல் பிறக்கிற குழந்தைகளுக்கு உயிர் இருக்கிறது. இன்றுங் குழந்தைகள் பிறக்கிற நிலை எ வின் உருவத்தில் ∂ கருப்பையிலிருந்து பூமி

யில் விழுகின்றது. உலகத்திலுள்ள உயிருள்ள பொருள்களெல்லாம் 7 என்ற இலக்கத்தை ஒத்திருக்கின்றன.

## பாச இயல்

மூன்றாவதாக எ விலுள்ள | இந்த அடையாளமிட்ட கோட்டைப் பற்றி ஆராய்ச்சிசெய்யப்போவோமானால் இது மாலென்றும், பாசமென்றும் முன் பதியியலிற் சொல்லியிருக்கின்றோம்.

மொழிவாரியாகப் பார்த்தோமானால் தமிழெழுத்துக்கள் எல்லாவற்றிலும் இந்த எ உருவத்திலுள்ள ஏதாவது ஒரு பாகம் இருக்கிறதைப் பார்க்கலாம். அ, க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன, என்ற பத்தொன்பது எழுத்துக்களாகிறது. இந்தப் பத்தொன்பது எழுத்துக்களிலும் எ வின் ஏதோ ஓர் பாகம் வருகிறதைப் பாருங்கள். தமிழ் எழுத்துக்களில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்று மூன்று வகைகள் உண்டு. உயிரெழுத்துக்கள் 12ம் தானாக வேறு எழுத்துக்கள் உதவியின்றி ஒலிக்கும். கடவுள் வேறு ஒருவர் உதவியின்றி இருப்பான். ஆகவே இவைகளைக் கடவுள் எழுத்துக்கள் என்று சொல்லலாம். மெய்யெழுத்துக்கள் 18. இவைகள் உயிரெழுத்துக்கள் உதவியின்றித் தொழிற்படாது. உதாரணமாக, க் + அ என்றுதான் தொழிற்படும். ஆகவே இவைகள் ஜீவன் எழுத்துக்கள் என்று சொல்லலாம். இந்த மெய்யெழுத்துக்கள் கடவுள் எழுத்துக்களாகிய உயிரெழுத்துக்கள் உதவியை நாடும். இது சித்தாந்த முறைப்படி உலகிலுள்ள உயிர்கள் கடவுளை நாடுகின்றன வென்பதைப் பொருள்படுத்துகின்றன. இன்னும் உயிரின் இயல்பு இறையைப் பற்றுந் தொழிலிற் காணப்படுகின்றது.

உயிர்மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்துக்களாலும் மெய்யெழுத்துக்களாலும் உண்டுபண்ணப்படுகின்றன. இதிலுஞ் சித்தாந்

தப் பொருத்தம் மிக வுண்டு. இறைவன் உயிர்களுக்காகப் பாசத்தை உண்டாக்குகின்றான். உயிரைப் பற்றுவான், பாசத்தைப் பற்றமாட்டான், பாசம் உயிரைப் பற்றும். இவ்வித உண்மைகள் இங்கே இருக்கின்றது. உயிர்மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்துக்களால் உண்டுபண்ணப்படுகின்றன. (இது இறை பாசத்தையும் படைப்பது) மெய்யெழுத்துக்களோடு சேர்ந்து உயிரெழுத்துக்கள் உறழ்ந்து உயிரெழுத்தின்ஒலி சேர்ந்து உருவமறைந்து மெய்யெழுத்தின் ஒலி வடிவம் ஒத்து வருகிறது. (இங்கே பாசம் இறையைப் பற்றாது, உயிர்களைப் பற்றும், இறையால் ஆக்கப்பெறுகின்றன.) இவ்வாறு மொழியின்றன்மையும், கடவுளின்றன்மையும் பல பல விதங்களில் முற்றிலும் பொருந்தியிருப்பது தமிழ்மொழிஒன்றிற்கேயன்றி வேறு மொழிகளுக்கில்லை.

எ என்ற எழுத்து ஆரிய எழுத்துக்களில் மலிந்து தோன்றுகின்றது. अ, आ அ, ஆ க்கள் ஆரிய மொழியிலிவ்வாறு எழுதி நோக்கினால் நமது எ என்ற இலக்கமானது தெரிவதைக் காண்கிறோம்.

ஆங்கிலத்தில் a, b, c, d, e, f, g, h, i, j, k, l, m, n, o, p, q, r, s, t, u, v, w, x, y, z, என்று எழுதி நோக்குவோமானால் 7 என்ற இலக்கமும் தமிலெழுத்துக்களிலுள்ள எ இவைகள் மலிந்துங் குறைந்துந் தோன்றுகிறதைப் பார்க்கிறோம்.

இந்த உலகத்திலுள்ள எந்தப் பாசைகளிலுள்ள எழுத்துக்களை எடுத்துப் பார்த்தாலும் 7 என்ற இலக்கமும் எண்ணில் எ (தமிழ்) இவைகளிரண்டினுடைய தோற்றம் இல்லாத படியே இல்லை இருக்கவுமிருக்காது. பதி, பசு, பாசம், இவை மூன்றுந்தான் உலகம், முன்னர் ஏழு என்ற எண்ணினுடைய (7) இலக்கத்தில் இவைகளை விளக்கினோம். எழுத்து முறையில் (எ) ஏழை விளக்குவோம் பார்ப்பீர்களாகவும். எ இவ்வாறு எழுதுகிறோம் இதனில் ஐந்து

வகையான தோற்றம் உண்டாகிறது இது சகல மாயையிற் சொன்ன படி சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மெய், வாய், கண், மூக்கு, செவி, மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சப்த, ஸ்பரிச, ரச, ரூப, கந்தம், இவைகள் எல்லாந்தோன்றுகின்றன என்பதை விளக்கு கின்றது. எ நான்கு பாகமாகத் தெரிகிறது. இவைகள் தனுகரண புவன போகம் என்ற நிலையிற் 24 தத்துவங்களும் உயிரினிடமாகத் தோன்றுகின்றன இன்னும் ஒரு மேலான தத்துவார்த்தமும் உண்டு.

எப்படி யென்று பார்ப்போம். வேதாந்தம், பரமான்மா, ஜீவான்மா, உலகம், என்று மூன்றாகப்பிரித்தார்கள் அப்படி மூன்றாகப் பிரித்துத்தான் ஈசன் என்று உலகமாகிய மாயை சம்பந்தப்பட்ட ஆன்மா நினைக்கவேண்டும். அப்படி ஜீவான்மாதான் ஈசன், ஈசன் என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது உலகமாகிய பாசத் தின் மத்தியிற் கிடந்து நினைக்குமென்ற உண்மையுந் தெரிகிறது. எ இந்த எழுத்தில் | இக்குறி இது உயிர் என்று சொல்கிற—இக் குறியின் மத்தியில் வந்து பொருந்தும் இவைகளிரண்டும் () இக் குறியைக் கொண்டு வருகின்றன. இங்கே கடவுளாகிய பரமான்மா, ஜீவான்மாவாகியும் உலகம் ஆகிய பாசமாகியும் இருக்கின்றான் என்பதையறிகிறோம்.

மேற்கொண்டு வேதங்களில் விதித்த பிரகாரமாக மக்களுக்கு நடக்கவேண்டியது ஆறு நாட்கள் ஏழாவது நாள் திருமண முத் தாய்ப்பு (முடிபு) இதைத்தான் எண்ணீர் என்றும், ஏழா நீர்ச் சடங்கு என்றும் ஏழா நாட்சடங்கென்றுஞ் சொல்கிறார்கள் இவ் வாறு திருமணஞ்செய்கின்ற காலத்தும் மற்றும் யாகங்கள், முத லானவை செய்கின்ற காலத்தும் அறிகிறோம். யாகசாலைக்கு ஏழு வகைச் சமித்துக்கள் வேண்டுமென்று சொல்லுகின்றார்கள்.

கோவில்களிற்றிருநாள் நடக்கின்ற காலத்து ஏழாவது திரு

நாட்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஏனெனில் ஏழாந்திரு நாள் இறைவன், உலகை நடத்துகின்ற மூன்று மூர்த்திகள் என்று காண்பிக்கிற முறையாம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. ஆனால் அது ஆகமச்சம்மதமின்றி எட்டாந் திருநாளிற் செய்யப்பெறுகிறது இதற்குச் சான்றுகிடையாது. ஏழாந்திருநாளிலே இவ்வாறு செய்ய வேண்டும். அவர்கள் செய்வது தவறு.

பேய்க் கோயில்களில் கொடை நடந்ததானல் பலியிடுவார்கள் (ஆடு, கோழி, பன்றி) இவ்வாறு செய்யப்பட்ட நாளைக் கழித்து ஏழாவது நாள் எச்சிவாய்த்தொடைப்பென்றும் ஒரு பூசை நடத்து கின்றார்கள். கொடை கொடுப்பதற்கு முன்னால் நோம்பு என்று ஒரு பூசை நடக்கும். நோம்பைக் கழித்து ஏழாவது கொடை நாள். அப்பொழுது விசேச பூசை நடைபெறும். நோம்பிட்ட ஏழா நாட் கொடை. கொடைபோட்ட ஏழாநாட் எச்சி வாய் தொடைப்பு. ஆகவே இது கால பரியந்தம் அந்தத் தெய்வம் எச் சில்வாயோடு இருக்கின்றதென்று அந்த நாட்களில் அந்தக்கோவில் களில் யாதொரு விதமான நல்ல காரியங்களுஞ் செய்யமாட்டார்கள். இவ்வாறு கொள்வதற்கு ஆகம வேத சம்பந்தமிருக்கின்றது. ஆக மங்கள் பலியைப்பற்றிச் சொல்லவில்லை. பலி செய்து வேள்வி செய்யச் சொன்ன வேதங்களே பலியிட்டுக் கொடை கொடுக்கச் சொல்கின்றது.

வேதம் இறைவனும் உயிரும் ஒன்றெனச் சொல்வது, சித்தாந் தம், கடவுள், உயிர், இரண்டும் வேறு வேறு பொருள்கள் என்று சொல்கின்றது. இவைகளைப் பின்னர் புகல்வோம்.

ஐந்தெழுத்துக்களிருக்கின்றன. அவைகளோடு பிரணவஞ் சேர்கிறது. ஆக இங்கே எழுத்துக்கள் ஏழாம். பொதுமறை என்று பெயர் பெறுகிற திருக்குறளை ஆக்கிய திருவள்ளுவர், பிரம்மா என்றும் அவர் தமிழில் ஒரு உலகப் பொது நூல் ஆக்கி வைக்க

வேண்டுமெனப் பாச உலகத்திற் பந்தலைக் குட்பட்டுத் திரிகிற ஆதிக்கும் பகவனுக்குந் தோன்றியவர். உப்பை, உறுவை, வள்ளி, ஔவை, கபிலர், அதிகமான் என்ற ஆறு பிள்ளைகள் தோன்றிய பின்னர் ஏழாவது பிள்ளையாக வந்துதித்தார்.

இரேகை சாத்திரத்தைப் புகன்றிருக்கின்ற முனிவர்கள் எல்லோரும் இரேகை சாத்திரத்தை ஏழு காண்டங்களாக விரித்துரைத்திருக்கின்றார்கள். இதனிலே பெரும்பாலும் நான்கு காண்டங்களாகச் சொல்லி ஏழாக மூன்று உட்பிரிவுகளுண்டாக்கிப் புகன்றிருக்கின்றார்கள்.

பிரகாரம் 3 முன் மண்டபங்கள் 3 ஆக ஆறு கழித்து ஏழாவது கர்ப்பகிரஹம் நியமிக்கப்பட்டிருக்கும். அதை மூலஸ்தானமென மறு பெயரிட்டுமழைப்பதுண்டு. அதிலே மூல விக்கிரகம் அமைக்கப்பெற்றிருக்கும்.

## ஒப்பியல்

இந்த அதிகாரத்தில் இலக்கம் 7 எழுத்து எ இவைகளிரண்டுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி அறிவோம். 7 இதில் ஐந்து விதமான தோற்றங்கள் உண்டு. எ இதனிலும் ஐந்து விதமான தோற்றங்கள் காண்கிறோம் ஆனால் உருவ அமைப்பில் இரண்டும் ஒத்திருக்கின்றது. எழுத்து எ ல் ஒரு சுளியுங் காண்கிறோம். 7 இலக்கம் எழில் இதை அர்த்தாபத்தியாகக் காண்கிறோம். ஆகவே 7, எ, என்ற ஏழைக் குறிப்பிடுகிற பொழுது பெரும்பாலும் ஒத்திருக்கிறது.

நாம் இனிமேல் ஏழு என்ற எண்ணிக்கையைப்பற்றிப் பிற நாட்டவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று பார்த்தால், அது தெய்விக சக்தி பொருந்திய பெரிய எழுத்து என்று சொல்கிறார்கள்.

இதற்குபேலாக விவிலியமதத்தினர் (கிறிஸ்தவம்) சொல்கிறது என்ன என்று பார்த்தால், தாவீதின் நேர் வழியில் வந்துதித்தோர்களில் ஏசுகிறிஸ்து ஆனவர் ஏழாவது என்று சொல்கிருர்கள்.

பாராசிகர்கள் ஆம்ஸஸ்பாண்ட்ஸ் (Amschaspands) ஏழு என்று கூறுகிருர்கள். தேவ தூதர்கள் ஏழுபேர்கள் என்று சொல்கிருர்கள். ஹிபுரு காபலவாவிற் கூறியுள்ள Sephiroth ஏழுபேர்களாகின்றன தேவகணங்கள் என்று சொல்லப்பட்ட ஏஞ்சல்கள் ஏழு பேர்களாகச் சொல்லப்படுகிருர்கள்.

நம்நாட்டவர்கள் சமாதிசாதிக்க வேண்டியவகையில் பத்மாசன முதலாகச்சொல்லப்படுகின்ற யோகாசனங்கள் ஏழுஎன்று சொல்லியிருக்கின்ருர்கள்,

காணபதம், கௌமாரம், சாக்தேயம், சைவம், வைணவம், சூரியனை வழிபடு மதத்தினர், சந்திரனை வழிபடுவோர் இந்த ஏழு விதமான மாறுபாடுகளை உடைய மக்களுக்காக ஏற்பட்டிருக்கிற கோவில்கள் ஏழு காணபதம், கணபதியை வணங்குஞ் சமயம், கௌமாரம், முருகனை வழிபடுஞ் சமயம், சாக்தேயம் சக்தியை வழிபடுவது, சைவம் சிவனை வழிபடுவது, வைணவம் திருமாலை வழிபடுவது.

தேவாரம், பரிபாடல் முதலான நூல்களுக்குப் பண்வகுத்த அடியார்கள் ஏழுவிதமான பண்கள் இருக்கின்றன எனச் சொன்னர்கள் உதாரணமாகச் செவ்வழி, சாதாரி,

இன்னுங் கிரகங்களை எடுத்துக் கொண்டு பார்ப்போமானல் (1) சூரியன், (2) சந்திரன், (3) செவ்வாய், (4) புதன், (5) வியாழன், (6) வெள்ளி, (7) சனி, இந்தச் சனி என்ற கிரகத்தை ஆராய்ச்சி பண்ணிப் பார்க்கிறபொழுது இதை ஒரு இரண்டு பெரிய வட்டப் பொருள்கள் சுற்றி வளைந்து கொண்டிருப்பதாகவும் மற்றையக்

கிரகங்களுக்கு இவ்வாறு இல்லையென்று வானசாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

கிரக நிலையைப் பின்பற்றிப் பார்த்தால் இந்தச் சனிக்கு சனீசுவரன் என்று ஈசுவரப் பட்டத்தையுஞ் சேர்த்துச் சொல்கின்றார்கள். இறைவனைப் போன்று ஆக்கவும் அழிக்கவும் அருளவும் வல்லவன். ஆனால் இவனுடைய பெயரைக் கண்டால் உயிர்களெல்லாம் நடுங்குகின்றன. ஏனெனில் சனி பெரும்பாலும் தீமை செய்கிற கிரகமாக உலகம் மதிக்கிறது. உண்மையில் சனி உலகத்திலுள்ள சகல ஜீவர்களுக்கும் நன்மையைச் செய்கிறது. எப்படியெனில் செல்வத்திலேயே தோய்ந்து கொண்டிருக்கிற பணக்காரனைக் கோவணாண்டி ஆக்கி அவனுக்குத் தரித்திரமும் இன்னதுதான் என்று தெரிய வைக்கிறான்.

நிழலினுடைய அருமை தெரியவேண்டுமானால் வெயிலிற் போயாக வேண்டும். வெயிலினுடைய கொடுமை தெரியவேண்டுமானால் நிழலிற்றங்கியாகவேண்டும். இப்படி இருக்கிற பொழுது ஒவ்வொரு ஜீவனும் செய்திருக்கிற புண்ணிய பாவங்களுக்கு ஏற்றபடி அந்தப் புண்ணிய பாவத்திற்குச் சரியானபடி சனீசுவரனால் கொடுக்கப்படும். சனியினுடைய பலனில் இன்பம் குறையவிருக்கிறது துன்பம் நிறைய இருக்கிறதே என்று பார்த்தால் உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் பாவம் நிறையச் செய்திருக்கின்றன புண்ணியங் குறையச் செய்திருக்கின்றன. அதற்குத் தகுந்தபடி சனியினாற் கொடுக்கப் பெறும் பலனும் உயிர்களுக்கு விதித்துக் கொடுக்கப்பெறும்.

மற்றுங் கிரகங்களெல்லாம் வினையைச் சம்பந்தப்படுத்திப் பலன் கொடுக்கும் பலத்தைப் பெறவில்லை. இக்கிரகம் அப்பலத்தை யுடையது. உலகத்தில் மாயை இல்லாதுபோனால் இறைவன் திருவருளை யார் அடைய விரும்புவார்கள். சனியினுடைய பார்வை

ஒரு உயிருக்கு இல்லையானால் அது உய்வினையைப் பெற்று மேலேற வழி கிடையாது. இவனுக்கு ஏழரை நாட்டுச் சனியன் என்று பெயர் கொடுத்திருக்கின்றார்கள்.

ஆகாய வீதியைப் பன்னிரண்டு இராசிகளாகப் பிரித்து மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம். கன்னிதுலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்று பெயர் கொடுத்தார்கள். இவைகள் ஒவ்வொன்றும் கிரகங்களுக்கு ஒவ்வொரு வீடு. சூரியன் ஒரு இராசியில் ஒரு மாதமிருப்பான். சந்திரன் $2\frac{1}{4}$ நாட்களிருப்பான். செவ்வாய், புதன், சுக்கிரன் 1 மாதமுதல் $1\frac{1}{2}$மாதம் வரைக்கும் இருப்பார்கள். வியாழன் 1 வருடமிருப்பான். ராகு, கேது $1\frac{1}{2}$ வருடமிருப்பார்கள். சனி ஒரு வீட்டில் $2\frac{1}{2}$ வருடங்கள் இருப்பான். சனி என்ற கிரகம் 3 வீட்டில் தங்குகிற (சந்திர லக்கினத்திற்கு முன்னும் பின்னுமாக) ஏழரை வருடங்கள் ஆகவே இதற்கு நியாயப் பிரகாரமாக கிரக சேர்க்கைப் பிரகாரம் 7 வருடங்களே அதிகாரம். ஏழாவது கிரகம் சரியாக 7 வருடங்களுக்கு உயிர்களைச் சேர்ந்து பலன் கொடுத்துக் கொண்டிருப்பான்.

இராமாயணத்தில் சுக்ரீவன் இராமனைச்சந்திக்கிறான். இராமன் சுக்ரீவனுக்கு அண்ணன் வாலியைக் கொன்று கிட்கிந்தை நகரை அவனுக்குக் கொடுப்பதாகச் சொன்னான். சுக்ரீவனுக்கு இராமன் வாலியைக் கொல்வானா என்ற சந்தேகம் உண்டாய் விட்டது உடனே இராமனைக் கொண்டுபோய் ஏழுமராமரங்களையும் ஒரு கணையினால் துளைக்கச் செய்கிறான் இராமனும் அந்த மாதிரியே செய்கிறான் பின்னர்ச் சுக்ரீவன் இராமன் வாலியைக் கொன்றுவிடுவானென்று நிச்சயப்படுத்திக்கொள்கிறான்.

தாதுக்களைப்பற்றித் தெரியப் புகுந்தால் அவையும் ஏழு ஆங்கில மகாகவி சேக்ஸ்பியர் மனிதனின் பருவங்கள் ஏழு என்று குறிப்பிட்டிருக்கின்றார். இளமை, மத்திமம், நரை, திரை, பிணி,

மூப்பு, சாக்காடு, என்ற ஏழ்வகையாகப் பிரித்துக் காண்பித்து விட்டார்.

கர்த்தர் ஏழு நாட்களைப் பற்றிச் சொல்லுகிறபொழுது இஸ்ரவேலர்களுக்கும் அவர்களின் சந்ததியார்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற சங்கேதம் என்று கூறினாராம். ஒவ்வோர் நாழிகையிலும், வாரத்திலும், தினத்திலும், மாதத்திலும், இருதுவிலும், ஆண்டிலும் ஏழு என்றதின் சக்தி வியாபகமாகி இருத்தலை ஒவ்வொரு தனிப்பட்ட உயிரும் தெரிந்துகொள்ள உள்ளங்கை நெல்லிக்கனியென வெள்ளிடைமலையாக தெரியக்கிடக்கின்றது. இவண் விரிவஞ்சி விடுகின்றனம்.

ஏழு கிரகங்களும், ஒஜிகலில் உலகத்தைச் சுற்றி வருகின்றன என்று கூறுகின்றன. இவ்வாறு சுற்றி வருபவர்களைத்தான் நாம் கிரகங்கள் என்கிறோம் அவர்கள் சுற்றி வருபவர்கள் என்று சொன்னார்கள். ஜெரிகோவின் அரணின் வீழ்ச்சி நாட்கள் ஏழு என்று சொல்லியிருக்கின்றார்கள்.

சக்கரவாளகிரிக்கு அப்புறமாக மூதண்டகூடம் இருக்கின்றது இவைகளுக்கு ஊடே ஏழு அண்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார் இதைப்பற்றி ஒட்டக்கூத்தராது அண்டத்துப்பரணி என்ற நூலில் விளக்கமாகக் காணலாம். பழைய காலத்து அரசர்களரண்மனையைச் சுற்றி ஏழுவகை அரண்கள் இயற்றப்பட்டிருப்பதையுங் காணலாம்.

மகமதியர்களைப்பற்றி ஆராயப் புகுந்தால் குரானில் தெய்வீக சக்தியானது ஆவியாக இருக்கின்றது. இவ்விதமாக ஆவியாக இருக்கக்கூடிய தெய்வீக சக்தியானது 7 என்று சொல்கின்றார்கள். இதைப்பற்றி ஆராயப் புகுந்தால் உலகத்திலுள்ள உயிர்கள் ஆவி உலகத்திலே கடவுளானவன் ஆவி மயமாக உயிருக்குள் உயிராய்

நடத்துகின்முன். ஆகவே வேதாந்த மார்க்கத்தைப் போன்று பாசங்களிருக்கின்றதாக ஒப்புக்கொள்ளவில்லை. மேலும் ஞான வழியிலே இருந்து வழிபடுகிற அடியார் கூட்டங்கள் மாதிரித் தோன்றுகிறது. ஏழு விதமான ஆவிகளை தெய்வ சக்தி உள்ளவை களென்று எகிப்தியர் ஒப்புக்கொள்கிருர்கள்.

## ஒழிபியல்

ஒன்று முதல் ஒன்பது ஈருகவுள்ள எண்களுக்குள் எட்டு என்ற எண்ணினைச் சில காரணங்கள் கருதி நீக்கவேண்டியதாகிறது. அது நுண்ணிய மேலாராய்ச்சியாளர்களால் கெட்ட பலனைக் கொடுக் கின்றது என்றுஞ் சொல்கின்ருர்கள். உதாரணமாகப் பல்லியானது ௮ சொற்கள் சொல்லுமானுல் சாவு வருகிறதென்று கவுளி சாத்திரம் உணர்த்துகிறது. ஆந்தையானது எட்டுச் சத்தம் போடுமானுல் சாவுதான் என்று நிச்சயித்துக்கொள்ள வேண்டுமென்றும் அறி கிருேம்.

ஒன்பது என்பது ஸ்தூல வழி பற்றி நிற்கின்றது. ஆகையி னுல் அந்த ஒன்பது என்ற எண்ணமும் இங்கே ஏழு என்ற எண் ணிற்கு உவமையாகக் கூறப்படவில்லை. ஆகவே எட்டு ஒன்பது இரண்டிற்கும் மேலாய தெய்வீக சக்தி கொண்டது என்று எந் நாட்டவர்களாலும் போற்றி ஏற்றிச் சொல்லப் பெறுவது 7 என்ற இலக்கம். இன்னுந் தமிழ்மொழியிலுள்ள எ, இலக்கத்தில் உள்ள எழுக்கு முற்றிலும் ஒத்திருக்கக்கூடிய தன்மையைப் பெற்று சக்தி யாலும், இனிமையாலும், பேச்சாலும் உயர்ந்த தன்மையை 7 இலக் கம் தமிழிலுள்ள எ இலக்கத்திலடங்கி நன் மதிப்பைக் கொடுக்கின் றது. உதாரணமாக Roman Lettersல் ஏழை VII இவ்விதமாக எழுதவேண்டி இருக்கின்றது. இலக்கம் 7 இப்பொழுது இந்த எண்ணை முற்றிலும் ஒத்திருக்கவில்லை. கண்டு தெளிவடைகிருேம்.

நாம் உலகத்தில் மனிதப் பிறவியிலே கண்கூடாகப் பார்ப்பது எ, என்ற எழுத்தினுடைய சொரூபத்தைத்தான் காண்கிறோம். இந்த நிலையிலே வைத்துப் பார்த்தால் உலகமானது இறைவனது திருவடியில் (இலயம், போகம், அதிகாரம்) தோற்ற ஒடுக்க நிலைத்தல் தொழிலைச் செய்கிறது. இது கருதியே திருவள்ளுவர் "கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன், நற்றாள்தொழா அரெனின்" என்று சொன்னார். இதன் பொருளை உரையாசிரியர் மிகவும் அழகாக விளக்குகிறார்.

இறைவன் உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் மேலானவர், அவன் யாவருக்கும் நன்மை செய்பவேண்டும். அப்படிக்கல்லாது போனால் அது நல்ல திருவடியென்று பெயர்பெறமாட்டாது. எல்லா உயிர்களுக்கும் ஈசன் திருவடியானது செய்கிற நன்மையென்ன வென்றால், அழியாத பேரின்பமாகிய மோக்ஷத்தைக் கொடுக்கிறது ஒன்றே. இதுவே நற்றாளிற்கிலக்கணமாகுமென்றார்.

உயிருங் கடவுளும் ஒன்று என்று வேதாந்தத்தே சொல்லப் படுகிறது. இதனிடம் பாசம் உண்டு. உயிர் வேறு, கடவுள் வேறு, பாசம் வேறு மூன்றும் அநாதியே உள்ள பொருள்கள். உயிர் பாசத்தை நீக்கி இறையை நினைக்கத் திருவடி கிட்டும். இதிலே சிரமமில்லை. பாசம் உயிரைத் தாக்காது மேலதில் பாசம் எப்பொழுதுந் தாக்கி முத்தியில் வேறாகும். "வேதாந்த சித்தாந்த சமரச சன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே" என்ற தாயுமானார் வாக்கினாலறியக் கிடக்கின்றது.

இரண்டு பாதங்களையுஞ் சேர்த்துவைத்துப் பார்த்தால் இங்கே சிறப்பாக L L இந்த அடையாளத்தில் எழு தோன்றும். இறை மீது ஏற்றிப் பார்ப்போமானால் (உருண்டை) சுத்த சூனியமாக இருக்கின்றது. அப்பொழுது உலகம் ஓங்காரமாகிய பிரணவ நிலையிலிருக்கின்றது. அப்பொழுது அறிவு, இச்சை, தொழில் என்ற

குணங்களிற்பட்டு எழு ரூபத்திலுள்ள இரண்டு பாதங்களையுந் தூக்கி நடனமாடுகிறான். ஒலி, ஒளி பிறந்து பஞ்ச பூதச் செயலால் உலகம் ஆக்கப் பெறுகிறது. இதே சித்தாந்த சாத்திரத்தில் நடராசன் நடனமாடிய நிலையாம்.

வைணவ சமயத்தில் திருமால் காளிங்கன் என்ற பாம்பின் மீது இரண்டு கால்களையுந் தூக்கி நடனமாடினான் என்று சொல்கிறது. கோவர்த்தனகிரியைத் தூக்கிய இறைவனாகிய திருமால், இந்திர கோபத்திற்காளாகிய இடையர்களைக் காத்து இரட்சித்தான் என்று காண்கிறோம். இப்படி நாம் உணர்கின்ற காலத்திலே நம்முடைய மனத்திற்குள் ஒரு மலையை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும். அதைக் கிருஷ்ணன் என்ற ஒரு மனிதன் தூக்குகிறதாகவும் எண்ணிக்கொண்டு, அம்மலை அவன் தலையில் இருப்பதாக உருவெளித் தோற்றப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுது நமது தமிழெழுத்து P இவ்விதமாக இருப்பதை ஏகதேசமாக ஒத்திருப்பதை நமது மனக்கண் முன் காண்கின்றோம்.

எ என்ற எண்ணனது பெரிதாக இருக்குமா இதை எப்படிக் கடவுளுக்கு ஒப்பிடலாம் என்று பார்ப்போமானால் இராமகிருஷ்ண பரமஹம்சர் சிடர்களில் ஒருவர், நெற் கடை வைத்திருந்தாராம். அப்பொழுது ஒரு தடவை நெல்லை விலைக்கு வாங்க வந்தவருக்கு அளந்து கொட்டிக் கொண்டிருந்தாராம். அவர் 12 வரை அளந்து 13 என்று சொல்லி மறுபடி அளந்தாராம், அவர் 13, என்பதை மாறிமாறிச் சொல்லிக்கொண்டு இருந்துவிட்டு அதுவே மந்திரமாக யோக சமாதி கூடினாரென்று தெரிகின்றது. இதனால் இலக்கமானது முத்தியைக் கொடுக்கக்கூடிய முத்தி சாதனமென அறிகிறோம்.

நாம் ஒன்று முதல் 10 வரைக்குஞ் சொல்லிவிட்டு மேற்கொண்டு 11 என்று சொல்கிறோம். இங்கே எழு என்ற எண்ணு

னது 10 இப்படி எழுத்திலிருக்கிறது. அப்புறமாக பத்தின் மேல் வரவேண்டும் என்றபொழுது எ (Energy) இங்கே மாறி அதிட்டிக்கப்படவேண்டும். நாம் இலக்கத்தில் பத்து எழுதுவோம் 10 இவ்வாறு ஆகிவிடுகிறது. 10 இந்தச் சுன்னத்திற்கு மேலாக இருக்கிற நேர் கோடு சுன்னம் இருந்த இடத்தில் இறங்கி சுன்னம் மறைகிறது. 11 இந்த மாதிரி எழுதினல் பதினென்று என்று சொலகிறோம். இங்கே எழிற்கு இருக்கின்ற ஓர் நிற்குங் கோடும், படுக்கைக் கோடுமாகச் சேர்ந்து பதினென்றை உற்பத்திசெய்து தந்துவிட்டு மேலும் மேலும் இலக்கங்களை உற்பத்தி செய்கிறது.

உலகத்திலே கடவுளர்களை ஞாபகப்படுத்த வேண்டுவான்வேண்டி வார்த்து வடித்த சிலைகள் எழின் உருவத்திலேதான் இருக்கிறது. மனிதர்கள், விலங்குகள், பாம்பு, மீன், வௌவால், மயில், காகம், மரம் இவைகளெல்லாம் எழின் உருவத்திலேயே ஒத்திருக்கின்றது. சூரியன், சந்திரன், உடுக்கள் (நக்ஷத்திரங்கள்) இவைகள் எல்லாம் எழில் வருகிற சுன்ன ரூபத்திலேதான் காண்கிறோம். உலகத்திலே காட்சிப் பொருள்களெல்லாம் நிச்சயமாய் எழின் உருவத்திலேதான் தோன்றுகின்றன.

இனிமேல் மனிதர்கள் காட்சிக்குட்படாத பொருளாகிய முக்குணங்கள் ஃ மாதிரியாக இருக்கின்றது, இவைகளுங்கூட இப்படியே எழின் சுன்ன ரூபத்தை ஒத்திருக்கின்றன. நாம் கடவுள் நிலை பெற்ற சகல பொருளும் எழின் உருண்டை நிலையிலிருக்கின்றன என்று கொள்கிறோம். அப்படிக்கல்லாத தெய்வீக சக்தியில்லாதவைகளெல்லாம் எ என்ற எழுத்தினுடைய கோட்டை ஒத்திருக்கின்றன. இப்படித் தோன்றுகிற உலகத்தில் தோன்றக்கூடியன தோன்றக்கூடாதன எல்லா வகையான பொருள்களும் (சொல்லாகிய உலகத்திலுள்ள பொருள்கள், பொருளாலாகிய உலகத்தி லுள்ள பொருள்கள்) எ் என்ற எழுத்தையும் 7 என்ற இலக்கத்தை

யும் ஒத்திருக்கின்றன. இப்படிக்கில்லாத எவ்விதமான சொல்லோ, பொருளோ, இல்லையென்பது துணிபு.

கந்தபுராணத்துள் கவனிக்கப் போவோமானல் ஆறு நாட்கள் சூரபன்மன் சண்டை நடக்கிறது. 1 முதல் 6 நாட்கள் சுப்பிரமணியக் கடவுள் மறக்கருணை சாதித்து எதிர்த்து வந்த அரக்கர்களையெல்லாம் கொலை செய்துகொண்டு திரிகிறுன், ஏழாவதுநாள் சூரபன்மனல் சிறையில் வைக்கப்பட்ட தேவர்களெல்லாம் விடுதலையடைகின்ருர்கள். அன்று முருகக் கடவுளுக்கு தேவேந்திரன் தெய்வயானையைக்கொண்டு வந்து மணஞ் செய்து வைக்கின்ருன். முருகன் சிவனுடைய பிரதிநிதி. (Representative) தெய்வயானை சக்தியின் பிரதிநிதி, முருகனுகிய அன்பு சக்தியாகிய அருளைக் கூடுகிறது. இதைத் திருமூலரும் "அன்பே சிவமென்பதாருமறிகிலார்" என்று சொல்லிப்போனுர். முருகன் சிவமென்பதை "ஐந்துமுகத்தோடதோமுகமுஞ் சேர்த்துத் திருமுகங்களாருகி" என்று குமரகுருபர சுவாமிகள் சொல்லியிருக்கின்ருர்.

கிறிஸ்தவ மதம் ஏழாவது நாள் கர்த்தருக்கு ஓய்வு நாள் எனச் சொல்கிறது. ஆகவே அந்நாள் நமக்கும் ஓய்வு நாள். அந்த நாளிலே நாம் யாதொருவிதமான நல்ல காரியமுஞ் செய்யக்கூடாது என்கிறது. கால வித்தியாசத்தால் மாறுதலுக்கு இடமேற்பட்டு இருக்கிறது .அவர்கள் திங்கட்கிழமை முதல் கணக்கிடுவார்கள். நாம் ஞாயிற்றுக்கிழமை முதல் நாளைக் கணக்கிடுகிறோம். நமக்கு ஏழாவது நாள் இறைவன் தன்மைபெற்ற நல்ல நாள். நல்ல காரியங்கள் செய்யவேண்டிய நாள் என்று கொள்கிறோம்.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

ராவ்பகதூர்

## S. C. சுப்ரமணிய பிள்ளை
## பதிப்பித்த நூலட்டவணை.

1. திருச்செந்தூர் மாலை
2. ஆனந்த வழி
3. எழின் தத்துவார்த்த விளக்கம்

அமிர்தா பிரஸ், தூத்துக்குடி:- 49